இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - மட்டம் 4
இறுதிப் பரீட்சை 2007
குடும்பச் சட்டம் - LWU 2313
காலம்: 03 மணித்தியாலம்

திகதி: 12.03.2007 நேரம்: மு.ப 10.00 – பி.ப 1.00 மணி வரை

ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்

1. அங்கத்துவ அரசுகள் இனம், நிறம், பால், மொழி மற்றும் மதம் போன்ற எவ்வகையான பாகுபாடுமின்றி ஒவ்வொரு பிள்ளையுடைய உரிமைகளையும் உறுதிப்படுத்த வேண்டும் என்பதை ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் உடன்படிக்கையின் உறுப்புரை 2 தேவைப்படுத்துகிறது. எவ்வாறாயினும் சிறுவர்கள் உரிமை மீதான இலங்கையின் சட்டம், இலங்கையில் சிறுவர்களின் நிலைமையை முன்னேற்ற முயற்சிகள் எடுத்துள்ள போதிலும் இந்த தராதரத்தை அடைவதில் தோல்வி கண்டுள்ளது.

   தேசியம், பிறப்பு மற்றும் மதம் என்பவற்றின் அடிப்படையில் பிள்ளைகளுக்கு எதிராக பாகுபாட்டை ஏற்ப்படுத்தும் துறைகளுக்கு விசேட கவனம் கொடுத்து இக்கூற்றை விமர்சித்து ஆராய்க.

2. குணசிறி இராணுவ வீரன் ஒருவனாக இருந்தான். அவன் அம்பாறையில் பணியாற்றிக் கொண்டு இருக்கும்போது சோமா என்ற விதவையுடன் காதல் தொடர்பு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டான். சோமாவுக்கு ஐகத் என்ற பெயரைக்கொண்ட இரண்டு வயது பிள்ளை ஒன்று இருந்தது. 2003ஆம் ஆண்டு குணசிறி, சோமா மற்றும் ஐகத் இருவரையும் மதவாச்சியில் வாழ்ந்து வந்த தன்னுடைய மாமியின் வீட்டுக்கு அழைத்துச் சென்றான். சோமாவுக்கும் தனக்கும் ஏற்பட்ட தொடர்பை கொண்டாடும் முகமாக விருந்து உபசாரம் ஒன்றை ஏற்பாடு செய்ததுடன் விருந்தினர்களுக்கு மதுபானத்துடன் இராச்சாப்பாடு வழங்கி உபசரித்தான். அதன் பின்பு தனது மாமியாரின் காணிக்கு அடுத்துள்ள காணியில் சிறிய குடிசையொன்றை கட்டி குணசிறியும் சோமாவும் கணவன் மனைவியாக வாழத்தொடங்கினர். அவன் கிரமமாக தனது குடும்பத்தை சென்று பார்த்து வருவதுடன் அவர்களை பார்க்க வரமுடியாத சூழ்நிலைகளில் பணம் அனுப்பி வந்தான். சோமா 2005ஆம் ஆண்டு குழந்தை ஒன்றை பெற்றெடுத்தாள். அக்குழந்தைக்கு சுமணா எனப் பெயரிடப்பட்டது. 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இராணுவத்தை கைவிட்டு சென்ற குணசிறி அதிகாரிகளால் தான் கைதுசெய்யப்படலாம் என்ற பயத்தின் காரணமாக வீட்டுக்குச் செல்லாது சுற்றித்திரிந்தான். அதன் பின்பு அவன் குடும்பத்திற்கு பணம் அனுப்புவதை நிறுத்திக்கொண்டான். குணசிறி புத்தளத்தில் வேறு ஒரு பெண்ணுடன் வாழ்ந்து வருவதாக சோமாவுக்கு அறிய கிடைத்தது.

   தன்னுடையதும் தனது இரண்டு பிள்ளைகளினதும் பராமரிப்பு தொடர்பாக குணசிறியுடைய கடப்பாடு தொடர்பாக சோமா உமது ஆலோசனையை நாடுகிறாள்.

   (அ) சோமாவுக்கு ஆலோசனை வழங்குக.

   (ஆ) குணசிறி சோமாவுடன் தனக்கு நடந்த திருமணத்தை 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பதிவு செய்து இருந்தால் உமது விடையில் மாற்றங்கள் ஏற்படுமா?

3. கமலா மற்றும் யோகராஜா இருவரும் தேச வழமை சட்டத்தின் கீழ் ஆளப்படும் கணவர் மனைவியாவர். திருமணத்தின் பின்பு அவர்கள் யோகராஜாவினால் வாடகைக்கு எடுக்கப்பட்ட வீட்டில் வசித்து வந்தனர். கமலாவினுடைய பெற்றோர், யோகராஜாவுடன் அவளுக்கு நடந்த திருமணத்தின் போது பெருந்தொகையான சீதனங்களை வழங்கினர். சீதனம், சிலாபத்தில் இருந்த இரண்டு ஏக்கர் தென்னங்காணியையும் பணமாக 1 மில்லியன் ரூபாவையும் உள்ளடக்கியிருந்தது. சில காலத்தின் பின்பு இருவருக்குமிடையில் அடிக்கடி சண்டை ஏற்பட்டது. யோகராஜா ஒரு நாள் தனது திருமண இல்லத்தை கைவிட்டு தன்னுடைய பெற்றோருடன் சென்று வாழத்தொடங்கினான். தன்னால் வாடகைக்கு எடுக்கபட்ட வீட்டை தான் காலி செய்வதாக வீட்டு உரிமையாளருக்கு அறிவித்தான். யோகராஜாவை விட்டு பிரியவோ அல்லது அவனிடம் இருந்து விவாகரத்து பெறவோ கமலா விரும்பவில்லை.

(அ) உரோமன் டச்சு சட்டத்தின் கீழ் கைவிடப்பட்ட மனைவி என்ற வகையில் தனக்குள்ள உரிமைகளையும்

(ஆ) தேச வழமைச் சட்டத்தின் கீழ தன்னுடைய அசைவற்ற ஆதனங்களை கையுதிர்த்தல் தொடர்பான தீர்க்கப்பட்ட வழக்குகளை கொண்டு கமலாவுக்கு ஆலோசனை வழங்குக.

4. சுனிமல், மாலா இருவரும் பொதுச்சட்டத்தின் கீழ் திருமணமானவர்கள். சுனிமல்லுடைய ஒரே சகோதரி குமாரி விபத்தொன்றில் இறந்ததை தொடர்ந்து அவளுடைய கணவன் தனது 10வயது நிரம்பிய மகனை சுனிமல் மற்றும் மாலா இருவரிடம் விட்டு வெளிநாடு செல்ல தீர்மானித்தான். எவ்வாறாயினும் சுனிமல், மாலா இருவரும் மகனை சட்டரீதியாக மகவேற்க விரும்பினர்.

(அ) இயைபான திறத்தவர்களால் பூர்த்திசெய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகள்.

(ஆ) பின்பற்றப்பட வேண்டிய சட்ட நடவடி முறை

(இ) பிள்ளையுடைய மகவேற்பினால் ஏற்படுகிற சட்ட விளைவுகள் என்பன தொடர்பில் சுனிமல் உமது ஆலோசனையை நாடுகிறான். அவனுக்கு ஆலோசனை வழங்குக.

5. பின்வரும் நிலைமைகள் தொடர்பில் இலங்கையின் திருமணம் தொடர்பான சட்டம் ஒரு ஒழுங்குமுறையை பிரதிபலிக்கிறதா என்பது தொடர்பில் ஆராய்க.

(அ) இறுதி விருப்பாவணமற்ற மரபுஉரிமை தொடர்பாக திறத்தவர்களுக்குள்ள உரிமைகள் மற்றும்

(ஆ) சட்டரீதியான திருமணம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு பின்பற்றப்பட வேண்டிய சட்டத்தேவைப்பாடுகள்

6. குறுகிய கால அறிவித்தலின் பின்பு ஜெயம் சீதாவைத் திருமணம் செய்தான் அவர்கள் தமது திருமணத்தை பொதுச்சட்டத்தின் கீழ் பதிவு செய்து ஜெயத்தினுடைய கொழும்பிலுள்ள சொகுசு வீடொன்றில் வசித்தனர். சீதாவை பராமரிக்க தனக்கு போதிய வருமானம் இருப்பதால் வங்கியொன்றில் நிர்வாக அலுவலராக பணிபுரிந்த சீதாவிடம் அவளுடைய தொழிலிருந்து இராஜினாமா செய்யுமாறு ஜெயம் திருமணத்தின் பின்பு வற்புறுத்தினான். எவ்வாறாயினும் சீதா தனது வேலையை இராஜினாமா செய்ய விரும்பவில்லை. அதன் பின்பு சீதா வங்கியில் உள்ள இன்னுமொரு நிர்வாக அலுவலருடன் திருமணத்திற்கு புறம்பான உறவு ஒன்றை வைத்துள்ளாள் என ஜெயம் குற்றம் சாட்டியதுடன்

இக்காரணத்தின் நிமித்தம் அவளிடம் சண்டையிட்டான். பல சந்தர்ப்பங்களில் அவன் மது அருந்திவிட்டு வீட்டுக்கு வருவதோடு அவளை தாக்கவும் செய்தான். ஒரு நாள் தனக்கு பிறிதொரு அறையில் வசிக்க வேண்டும் என ஜெயம் கூறியதுடன் அவளுடன் ஒன்றாக சேர்ந்து உணவு உண்ணவும் மறுத்தான். அதன் பின்பு சீதாவுடன் பேச்சு வார்த்தைகளை நிறுத்திக்கொண்டான். ஒரு நாள் சீதாவை திருமண வீட்டை விட்டு வெளியேறுமாறு கூறினான். சீதா வீட்டைவிட்டுச் சென்று தனது பெற்றோருடன் வசிக்கத் தொடங்கினாள். சீதா தனக்கு கிடைக்கக்கூடிய மணம்சார் பரிகாரங்கள் தொடர்பில் உமது ஆலோசனையை நாடுகிறாள்.

(அ) பொருத்தமான தீர்ப்புச்சட்டங்களை குறிப்பிட்டு சீதாவுக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) திறத்தவர்கள் இருவரும் கண்டியராக இருந்து தமது திருமணத்தை கண்டியச் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருப்பின் உமது விடை வேறுபடுமா?

7. இலங்கைச்சட்டத்தின் கீழ் பராயமடையாத பிள்ளைகளின் பாதுகாவல் தொடர்பான பிணக்குகளில் 'பிள்ளையுடைய சிறந்த நலன்' என்ற கோட்பாடு பயன்படுத்தப்பட்டுள்ள முறையை தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் ஆராய்க.

8. "திருமணத்திற்கு புறம்பான உறவின் விளைவாக பிறந்த பிள்ளைகள் சில தகமையீனங்களை அனுபவித்த போதிலும் தமது துர்ரதிஷ்டமான நிலையில் இருந்து மீண்டு வருவதற்கு அனுசரனை வழங்கக்கூடிய நிவாரணங்களும் உள்ளன".

இலங்கையின் பல்வேறு பட்ட சட்டங்களின் கீழ் திருமணத்திற்கு புறம்பான உறவின் விளைவாக பிறந்த பிள்ளைகளுடைய நிலைமை மற்றும் அத்தகைய சூழ்நிலைகளுக்கு பரிகாரம் வழங்கக்கூடிய சட்டநடைமுறைகள் என்பவற்றிற்கு விசேட அவதானம் வழங்கி இக்கூற்றை விமர்சித்து ஆராய்க.

(பதிப்புரிமைபெற்றது)